கடற்கரை கவியரங்கு! - 602

நாள் - 06-06-2021

# வேண்டுவோம் நாம்!

வானத்தின் பேரொளியோ! வையத்தின் சாரதியோ!
தானாக எழுந்ததுவோ! தரனியிதைப் பிரித்ததுவோ!
கோனாகி நிறைவதுவோ! கோலமிதைச் செய்வதுவோ!
வானாளும் விண்மீன்கள் வழிமுறையாய் ஆனதுவோ!

இரவென்றும் பகலென்றும் இயன்நிலையில் ஆனதுவோ!
கரங்கோத்து உயிரினங்கள் குவலயத்தில் வாழ்வதுவும்;
சிரந்தூக்கி மானுடமும் சிறப்போடு எழுவதுவும்,
உரம்போன்ற உன்கதிரின் உயிர்ப்பில் நிகழ்வதன்றோ!

விண்ணகத்தில் நீயிருந்து, விருப்புடனே பூமிதான் சுற்ற,
மண்ணகத்து வாழுகின்ற மாந்தர்தாம் சொல்லுகின்றோம்;
எண்ணத்தால் இவ்வுலகை இயக்குகின்றோம் தாம் என்றே!
கொண்டாடும் வாழ்வினிலே கோடியாய்த் தீங்கிட்டு,

உண்டான இயற்கைக்கு உருவில்லா தீங்கிழைத்தோம்,
திண்டாடும் மனம் கண்டோம்; தீங்கான சூழ்நிலையில்!
பண்பாடு தனை மறந்தோம்; பண்பாடும்நிலை மறந்தோம்!
கொண்டாடும் இயற்கைதனைக் கூறிட்டு சீரழித்தோம்!

வேண்டுவோம் யாவருமே விருப்பாக மனம்கூடி,
கண்ணிமையாய் இயற்கையதன் கருந்தறிந்து செயல்படுவோம்!
மண்ணகத்து எழில்தனையே மருவின்றி காத்திடுவோம்!
விண்ணகத்து நாயகனே, வேரான இறையவனே!

**கவிவளவன்** ஆகிய **து.ப.அசோகன்**

05-06-2021 (5.50 PM)